**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.320/2013</u>** **தேதி.**18.11.2025

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி.பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 18.11.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.கலாவதி |
| க/பெ. | திரு.H.வேலு |
| வயது | 73/2025 |

துவக்க நேரம் 02.40 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்திற்காக போட்டேன். பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி எனது ஊர்க்காரர் அதனால் எனக்கு தெரியும். நான் அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.1,00,000/- கொடுத்தேன். பணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் லட்சுமியும், அவரது கணவரும் வந்தார்கள். இருவரிடமும் கொடுத்தேன்.

2. வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 433 ஆகும். இந்த சர்வே எண்ணில் உள்ள சொத்து நிலமா, வீடா என்றால் நிலம் ஆகும். நஞ்சையா, புஞ்சையா என்றால் தண்ணீர் இல்லாத கொல்லைமேடு. அது எத்தனை செண்ட் நிலம் என்றால் 0.9 செண்ட் நிலம். இந்த நிலத்தை சுற்றி வீடுகள் உள்ளதா என்றால் இல்லை.

3. பணம் கொடும்கும்பொழுது யார் யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை லட்சுமியும் அவரது வீட்டுக்காரரும்தான் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. என்னுடன் என் வீட்டுக்காரர் இருந்தார். நான் பணம்

கொடுத்தது 5 அல்லது 6 மணி இருக்குமா என்றால் சாயங்காலம் 5 மணி இருக்கும். லட்சுமியும் அவரது வீட்டுக்காரரும்தான் பணத்தை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம். எத்தனை மாதம் வட்டி கட்டினார்கள் என்றால் நாங்கள் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. எந்த மாதத்தில் பணம் கொடுத்தேன் என்றால் 2008ம் வருடம் தீபாவளி மாதம் அதாவது ஐப்பசி மாதம் பணம் கொடுத்தோம்.

4. வேலு மற்றும் தர்மன் ஆகியோர்களை தெரியுமா என்றால் வேலு எனது கணவர். தர்மன் எனது மச்சினர். வேலு மற்றும் தர்மன் ஆகியோர் கையெழுத்தை எனது வீட்டில் வைத்து போட்டார்களா என்றால் இல்லை. Registrar Office ல் போட்டார்கள். எவ்வளவு ரூபாய்க்கு அக்ரிமெண்ட் எழுதப்பட்டது என்றால் ரூ.1,10,000/- பேசினோம். ரூ.1,00,000/-தான் கொடுத்தோம்.

5. பணம் கொடுப்பதற்கு முன்பாக சொத்தின் அசல் ஆவணங்களை பார்த்துதான் பணம் கொடுத்தேனா என்றால் Registrar Office ல் பேசி படித்து காண்பித்தார்கள். அதன்பிறகுதான் பணம் கொடுத்தோம். எவ்வளவு நாள் கழித்து பத்திரபதிவு செய்ய அழைத்தோம் என்றால் சுமார் 7, 8 மாதத்திற்கு பிறகு அழைத்தோம். அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இதோ வருகிறோம், இதோ வருகிறோம் என்று சில காலம் இழுத்தடித்தனர்.

6. கிரைய உடன்படிக்கையில் எவ்வளவு காலத்திற்கு கிரையம் செய்து கொடுப்பதாக எழுதினோம் என்றால் 3 வருடத்திற்கும் எழுதிகொடுப்பதாக எழுதினோம். கிரைய உடன்படிக்கையின் ரூ.1,00,000/- கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் ஏன் 3 ஆண்டுகள் வரை கால நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் பிரதிவாதிகள் டைம் கேட்டார்கள் அதனால் கொடுத்தோம்.

7. சொத்தை நாங்கள் கிரையம் வாங்குவதாக இருக்கும்நிலையில் பணத்தை கொடுக்க கால அவகாசம் நாங்கள் தான் கேட்டிருக்கவேண்டும் என்றாலும் மாறாக பிரதிவாதி கால அவகாசம் கேட்டதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள்தான் கால அவகாசம் கேட்டார்கள். பிரதிவாதி என்னிடம் கடனாகதான் பணம் கேட்டார்கள் என்றாலும், அதனால்தான் 3 ஆண்டுகள் கால அவகாசம் போட்டு

எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அவர் இடத்தை கொடுப்பதாக சொல்லிதான் கேட்டார்கள்.

8. பிரதிவாதி எங்கள் ஊரில் உள்ள ஒரு பழனி என்பவர் மூலமாக நான் கொடுத்த ரூ.1,00,000/- யை எனக்கு திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றால் நான் வாங்கவில்லை. நான் கடனுக்காகத்தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றாலும் அதனால்தான் ஆவணத்தில் 3 ஆண்டுகள் கால அவகாசம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.1,00,000/- நாங்கள் கட்டிவிட்டோம் என்றாலும் அதாவது 90 சதவீதம் பணத்தை கொடுத்துவிட்டோம் என்றாலும் மீதி 10 சதவீதமான ரூ.10,000/-யை கொடுக்கவில்லை என்றாலும் இதற்கு 3 ஆண்டுகள் கால அவகாசம் தேவையில்லை என்றாலும் சரியல்ல.

9. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளிடம் பத்திரம் இல்லாததால் கால தாமகதம் செய்ததாக நான் கசொல்லும் நிலையில் தற்பொழுது பத்ததிரத்தை பார்த்துதான் கிரைய உடன்படிக்கை போட்டதாக சொல்கிறேன் என்றாலும் முன்னுக்குபின் முரணாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பத்திரம் இல்லாததால்தான் பதிவு செய்யவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் பரிசீலிக்கவேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்க பிரதிவாதி தரப்பில் வேண்டபட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:- ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 03.10 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.